# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 62/2022

**வா.சா.1-** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள்-31-10-2025.

பெயர் = ஜெயராமன்

**வா.சா.-1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 1ம் பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் கம்பம், தேனி மாவட்டம். மேற்படி ஊரில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 40 வருடங்களுக்கு மேல் இருக்கும். இவ்வழக்கின் தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 4/5 ஆகும். சர்வே எண். 4/5 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு இருக்கும் என்றால் 27 செண்ட்க்கு மேல் இருக்கும். சர்வே எண். 4/5 வருவாய் துறை ஆவணங்கள் படி உட்பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய தாத்தா பெயரில் உள்ளது, தாத்தா பெயர் குப்புநாகுலு நாயுடு. எனது தாத்தா பெயரில் உள்ள பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி குப்புநாகுலு நாயுடு எனக்கு எந்த வழியில் தாத்தா என்றால் எனது அப்பா வழியில் தாத்தா.

(2) அசல் வழக்கில் தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே பாகவழக்குகள் நடைபெற்று வந்ததாக, சொல்லியுள்ளேன், மேற்படி பாக வழக்குகளில் இவ்வழக்கு 1ம் பிரதிவாதி தரப்பினராக இல்லை என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2025.10.25 14:33:08 +0530